## டவர் மண்டப அரங்க மன்றம் - 2017

டவர் மண்டப அரங்க மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 01 ஆம் இலக்க டவர் மண்டப அரங்க மன்ற அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து டவர் மண்டப அரங்க மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(அ) நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களுக்குரிய ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒட்டுமொத்த வகுப்பும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை மீள் மதிப்பீடு செய்யும் போது மீள்மதிப்பிடப்பட வேண்டும். ரூபா 275,000,000 கிரயமான நிதியத்தால் சொந்தமாக்கப்பட்ட தலைமை அலுவலகக் காணி 2016 செப்தெம்பர் மாதத்தில் ரூபா 614,000,000 இல் மீளமதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 123,000,000 மற்றும் ரூபா 205,000,000 கிரயமான முறையே டவர் மண்டப அரங்க காணி, மற்றும் சரசவியா காணி மீள்மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்தமையால், ரூபா 366,411,129 கிரயமான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், அவை மேலும் பயன்பாட்டிலிருந்தது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட கணக்கீட்டுத் தவறுகள் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதன மானிய கணக்கின் மீதி ரூபா 555,334,448 தொகையானதுடன் மன்றமானது மானியங்களிடமிருந்து பிரயோக அடிப்படையில் வருமானத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக மூலதன மானியங்களை இனங்காண்பதற்கு கணக்கீட்டுக் கொள்கையொன்றை இனங்கண்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாண ஒப்பந்தங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 88,704,638 இடைக்கொடுப்பனவு மற்றும் ரூபா 4,598,165 பிடிகாசு நடைபெற்றுவரும் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக முற்பணக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் விலை மதிப்பீடு திணைக்களத்தால் ரூபா 163,000,000 மதிப்பிடப்பட்ட கட்டிடத்தின் மீள்மதிப்பிடப்பட்ட தொகை 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,250,000 ஆல் குறைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) காசு நன்கொடை | 18,577,319 | பெறுகைகள், வங்கி வைப்புக்கள் |
| (ஆ) பொருட்கள் நன்கொடை | 58,890,541 | பொருள் பெறுகை குறிப்புக்கள், நன்கொடைகளின் பதிவேடு |

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ஏனைய பெறவேண்டிய கணக்கு மீதி ரூபா 4,604,413 தொகையானதுடன் ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையாகவுள்ள மீதி ரூபா 690,770 தொகையாகும். 2014 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை அங்கீகாரமில்லாமல் முன்னைய பணிப்பாளருக்கு ரூபா 350,630 தொகை எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 9,769,555 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 17,552,384 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 27,321,939 முன்னேற்றமொன்றை காட்டுகின்றது. மீண்டுவரும் மானியங்கள் ரூபா 11,517,000 செயற்பாட்டு வருமானம் ரூபா 2,743,460 இலும் ஏனைய வருமானம் ரூபா 15,444,154 ஆலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 வருடங்களினதும் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியான நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் மிகையொன்றும் இருந்தது. எனினும், ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினைக் கருத்திற் கொள்ளும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 28,695,875 தொகையான பங்களிப்பு தொடர்ச்சியான அதிகரிப்புடன் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 26,376,128 வரை குறைவடைந்திருந்த போதிலும், மீண்டும் 2015 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 31,686,774 இலிருந்து ரூபா 57,915,183 இற்கு அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

மூலதனத்தில் மற்றும் வெளியக நாடகத்தைப் பார்க்கும் பார்வையாளர்களுக்கு இரசனையை சரிசமமாக பிரித்து கொடுப்பதற்கு இயலும் வகையில் திரைகளின் வலையமைப்பை உருவாக்கல், நவீன வேண்டுதல்களுடன் இணங்கும் வகையில் நவீனமயப்படுத்தல் மற்றும் கூட்டிணைந்த திட்டத்தில் எதிர்கால சந்ததிக்காக பாதுகாக்கப்பட வேண்டிய இலங்கை பாரம்பரிய சுதேச நாட்டுப்புற நாடக கலாச்சாரங்களை பாதுகாத்தல் போன்றன நோக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இதனுடன் இணங்கும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், நிறைவேற்றப்பட திட்டமிடப்பட்ட 21 நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செயற்திட்டங்களில் ரூபா 2,550,000 கிரயத்திலான 03 நிகழச்சித்திட்டங்கள் அல்லது செயற்திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், நிறைவேற்றப்பட்ட 03 நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 16 சதவீதத்திலிருந்து 41 சதவீதம் வரையில் ஆகக்குறைந்த மட்டத்திலிருந்தது.

(ஆ) டவர் மண்டப நாடக மற்றும் திரையரங்கு பாடசாலையால் இரண்டு வருட முழு நேர நாடக மற்றும் திரை உயர் டிப்ளோமா பாடநெறி நடாத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட மாணவர்களுடன் ஒப்பிடும் போது 23 இலிருந்து 69 இற்கு அதிகரித்தது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டின் பாடநெறிக் கட்டணம் ரூபா 50,000 இலிருந்து ரூபா 85,000 இற்கு அதிகரித்திருந்தது. மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால் விரிவுரை மண்டப வசதிகள், நூலக வசதிகள், பயிற்சி மண்டப வசதிகள், கணனி வசதிகள், உடை மாற்றும் வசதிகள், ஓய்வு எடுக்கும் மாணவர்களுக்கு தேவையான வசதிகள், மற்றும் விடுதி வசதிகள் மற்றும் சிற்றுண்டிச்சாலை வசதிகள், ஏனையவை போதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, நிதியத்தின் நோக்கங்களை நடாத்தும் வகையில் டவர் நாடகம் மற்றும் திரை பாடசாலையின் அபிவிருத்தியின் அவசியத்தன்டை நோக்கி முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 ஏனைய நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட நிறுவனத்தின் வளங்கள்

நிறுவனத்தின் தலைமை அலுவலகமுள்ள இரண்டாம் தொடர்மாடி கட்டிடத்தின் கிட்டத்திட்ட 32,000 சதுரஅடி பங்குள்ள ஒரு கட்டிடமானது 2016 மே 16 இலிருந்து எந்தவொரு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடாமல் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் அலுவலகமொன்றிற்காக கொடுக்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடத்தை பயன்படுத்துவதற்காக 2018 செப்தெம்பர் 15 வரையிலும் அதிகாரசபையிடமிருந்து வாடகையாக பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 91 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் 95 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 26 ஆகும். ஆகையால், அதிக எண்ணிக்கையான வெற்றிடங்களை தைத்திருக்கும் மன்றத்தின் பல்வேறு பிரிவுகளின் நடவடிக்கைகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தடையொன்றிருந்தது.

(ஆ) மன்றத்தின் நிர்வாக மற்றும் அபிவிருத்தி பதவியின் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்காக நிலையான உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல், 2015 நவம்பர் மாதத்திலிருந்து 60 வயதிற்கு மேலுள்ள உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் வருடாந்த ஒப்பந்த காலத்தை விஞ்சி 2018 ஏப்ரல் மாதம் வரை வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் ரூபா 1,495,247 மொத்ததொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2002 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3(iv) ஆம் பந்திக்கு முரணாக, 03 மாதங்கள் பதிலீட்டுக் காலத்தை விஞ்சி பணிப்பாளர் நாயகம், முகாமையாளர் (ருக்மணி தேவி திரையரங்கு) முகாமையாளர் (என்பின்ஸ்டன் திரையரங்கு) மற்றும் ஒருங்கிணைக்கும் உத்தியோகத்தர் (பாடநெறிகள்) போன்ற 04 பதவிகளிற்கான பதிலீட்டிற்காக 06 மாதங்களிலிருந்து 01 வருடத்திலிருந்து 11 மாதம் வரையான கண்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 வரை பதிலீட்டுப் படியாக ரூபா 448,638 தொகையான பதலீட்டுப் படி செலுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலைபெறுதகு அபிவிருத்தி

## 5.1 நிலைபெறுதகு அபிவிருத்தியின் இலக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான ''நிகழ்ச்சித்திட்டம்'' ஐக்கிய தேசங்கள் வருடம் 2030 இன் பிரகாரம், ஒவ்வொரு நிறுவகங்களும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் மன்றமானது மீளாய்வாண்டுடன் தொடர்பான எல்லையின் கீழ் வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வாறு அமுல்படுத்தப்பட வேண்டுமென கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட வருடம் 2030 நிகழ்ச்சித்திட்டம் மீது மன்றமானது கவனஞ் செலுத்தியிருக்காமையினால் அத்தகைய இலக்குகளை அடைவதற்கான நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள், எல்லைகள் மற்றும் வீதி வரைபடங்கள் மற்றும் அதன் நடவடிக்கைகளுடன் தொடர்பான இலக்குகளை அடைதலை அளவிடுவதற்கான சுட்டிகள், இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் உப பிரிவின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்கள் 06 மாதங்கள் 5 நாட்களின் பின்னர் 2018 செப்தெம்பர் 05 இல் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், உள்ளகக் கட்டுப்பாடுகள் உள்ளக விசாரணையின் வழமை மற்றும் போதுமான தன்மை தொடர்பாக தொடர்ச்சியான செவ்வைகளை பராமரிப்பதற்கு உள்ளகக் கணக்காய்வு பிரிவு தயாரிக்கப்பட வேண்டியதுடன் மன்றத்தின் மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கும் உள்ளகக் கணக்காய்வொன்றை நடாத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை பூர்த்தி செய்வற்கு 2011 யூலை 20 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருந்த போதிலும், அத்தப் பதவியானது 2018 செப்தெம்பர் 15 இலும் வெற்றிடமாகவிருந்தது.

### 6.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.4 பெறுகை மற்றும் ஒப்பந்த செய்முறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எல்பின்ஸ்ரன் திரையரங்கு மற்றும் கதிரைகளுக்கு மாற்றங்களை நிறைவேற்றுவதற்கு முன்னர் அங்கு பொருத்துவதற்காக 700 இருக்கைகளை வழங்கல் மற்றும் ஸ்தாபித்தலிற்காக ரூபா 11,400,000 வழங்கல் உடன்படிக்கையான்றில் ஈடுபட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 9,019,794 இனை செலுத்துவதன் மூலம் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், வழங்குனரின் 2016 பெப்ரவரி 16 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் மன்றத்தின் பணிப்பாளர் நாயகமானவர் கதிரைகளின் பாதுகாப்பு மற்றும் பொறுப்பானது வழங்குனர்களால் எடுக்கப்பட்டிருக்கவில்லை என அறிவித்திருந்தார்.

(ஆ) 2018 ஏப்ரல் 02 அளவில் என்பின்ஜ்ரன் திரையரங்கிற்கான வளிப்பதனாக்கியிடப்பட்ட முறைமையின் பெறுகைக்காக ரூபா 15,244,049 தொகை செலுத்தப்பட்டிருக்கும். பெறுகை நடவடிக்கையுடன் ெடர்பில் 2015 பெப்ரவரி 27 இல் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் விலைமனுதாரருக்கு பொருத்த வேண்டப்பட்ட சரியான மற்றும் பொருத்தமான அடிப்படை தகவலானது அரச பெறுகை வழிகாட்டி 2006 இன் 5.3.2 வழிகாட்டியின் பிரகாரம் விலைமனு அழைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், வளிப்பதனாக்கிடப்பட்ட முறைமையின் வழங்கல், ஸ்தாபித்தல், பரீட்சித்தல் மற்றும் பெறுகை அமுல்படுத்தலிற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதனுடைய திருத்த மற்றும் பராமரிப்பு வேலைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால், திருத்தங்கள், பராமரிப்பு மற்றும் சேவைகளிற்காக மீண்டும் பணத்தை ஈடுபடுத்துவதன் மூலம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும்.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகளின் குறைபாடுகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | மூலதன மானியங்கள் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணமானது சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் தற்காலிக உத்தியோகத்தர்கள் வேலைக்கமர்த்தப்படாமை, நீண்ட காலமாக சில பதவிகளுக்காக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர். |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | சில பெறுகை வழிகாட்டியுடன் இணங்காமை, உரிய காலப்பகுதியில் கட்டிட நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு தவறியமை, மதிப்பீடுகளை தயாரிப்பதில் குறைபாடுகள் காணப்படல். |
| (ஈ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு செயற்படுத்தப்படவில்லை. |